**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**

**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 105/2017**

**வழக்கு சாட்சி – அ.சா. 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. செல்வி. | ஜாதி | |
| தந்தை பெயர் | அய்யாத்துரை | தொழில் | இல்லத்தரசி. |
| கிராமம் | அன்னஞ்சி. | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 62/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.01.2026.

**(1–வது எதிரி ஆஜர். 1–வது எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**அரசுத் தரப்பு முதல் விசாரணை:–**

நான் தற்போது, அன்னஞ்சியில் குடியிருந்துகொண்டு, இல்லத்தரசியாக வசித்து வருகிறேன். கடந்த 13.08.2016 – ஆம் தேதி அதிகாலை 03.00 மணியளவில் நான் என் வீட்டில் தூங்கிக்கொண்டிருந்தேன். எங்கள் வீட்டு ஜன்னலில் வீட்டுச் சாவியை வைத்திருந்தேன். அதை யாரோ எடுத்து, எங்கள் வீட்டுக் கதவைத் திறந்து வீட்டிற்குள் வந்து எனது 2–1/2 பவுன் எடையுள்ள தங்க கோதுமை மாடல் டாலர் செயினை அறுத்துக்கொண்டு ஓடிவிட்டார்கள். அது சம்பந்தமாக நான் அல்லிநகரம் காவல் நிலையத்தில் புகார் கொடுதேன். தற்போது, இந்நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்தப் புகார் **அ.சா.ஆ.1 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர், கடந்த 01.09.2016 – ஆம் தேதியன்று மேற்படி காவல் நிலையத்திலிருந்து என்னை அழைத்து விசாரித்தார்கள். மேற்படி எனது செயினை திருடிச் சென்றவர் துரைராஜ் என்று போலீசார் கூறினார்கள். அவரை என்னால் அடையாளம் காட்ட முடியாது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

சம்பவம் நடந்த அன்று, எனக்கு விடிந்த பின்புதான் எனது செயின் காணாமல் போனது தெரியவந்தது என்றால், சரியல்ல, செயினை எடுத்துச் செல்லும்போதே எனக்குத் தெரியும். எனது வீட்டுக் கதவிற்கும், ஜன்னலுக்கும் இடைப்பட்டு சுமார் 4 அடி தூரம் இருக்குமா? என்றால் சுமார் 1 ஜான் அளவு தூரம்தான் இருக்கும். எங்கள்து வீட்டின் சாவியை எடுத்துத் திறந்திருந்திருந்தால் அந்த சத்தம் எனக்குக் கேட்டிருக்கும் என்றால், நான்

தூங்கிக் கொண்டிருந்ததால் எனக்குத் தெரியவில்லை. நான் குடியிருக்கும் தெருவில் தெருவிளக்கு இல்லை என்றால், தெருவிளக்கு உள்ளது, ஆனால் தெருவிளக்கு அன்று எரியவில்லை. சம்பவம் நடந்தபோது, எங்களது தெருவில் வந்த நபர்கள் யார் என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான். எனது நகை காணாமல் சென்று 17 நாட்கள் கழித்துத்தான் நான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தபோது, நகை வாங்கியதற்கான ரசீது மற்றும் அது எனது நகைதான் என்பதைக் காட்டக்கூடிய புகைப்படம் எதையும் நான் காவல் நிலையத்தில் கொடுத்தேனா? என்றால் இல்லை. நான் சொன்னதுபோல், சொன்ன தேதியில் சம்பவம் நடைபெற்றிருந்தால் நான் அன்றே புகார் கொடுத்திருப்பேன் என்றாலும், நான் சொன்னதுபோல் சம்பவம் நடக்கவில்லை என்பதால்தான் நான் இந்த வழக்கிற்காகப் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

AASAY MARUDHU P

Digitally signed by AASAY MARUDHU P
Date: 2026.01.21 18:51:40 +0530

**நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),**
**தேனி.**